இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 80 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 14 – வெள்ளிக்கிழமை 31 அக்டோபர் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 80 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 14 - Friday 31 October 2025 - Chennai 16 Pages ₹ 5.00

## பசும்பொன்னில் ரூ.3 கோடியில்

# தேவர் திருமகனார் பெயரில் திருமண மண்டபம்!

## நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியபின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2025) இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என். நேரு, இ. பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், திருமதி. பி. கீதா ஜீவன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நவாஸ்கனி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ. முருகேசன், இராம. கருமாணிக்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கமுதி, அக்.31-**

**“பசும்பொன்னில் ரூ.3 கோடியில் தேவர் திருமகனார் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பசும்பொன்னில் தேவர் திருமகனார் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது அறிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2025) இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்பு, செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது முதல்வர் அவர்கள் கூறியதாவது:-

### ‘பாண்டிய மன்னர்களின் இளவல்’ தேவருக்கு அண்ணா புகழாரம்!

நம்முடைய நாட்டின் விடுதலைக்காக தன்னையே ஒப்படைத்துக் கொண்டு உழைத்திருக்கும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்திருமகனார்நினைவிடத்தில் இன்றைக்கு எங்களுடைய மரியாதையைச் செலுத்தியிருக்கிறோம்!

பசும்பொன் திருமகனாரின் புகழைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமையோடு எடுத்துச் சொன்னதை நான் இங்கே நினைவு கூர விரும்புகிறேன்.

“அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் மாதிரி, கம்பீரமாகக் காட்சி அளித்தார் தேவர் திருமகன்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், பசும்பொன் திருமகனாரை மனதாரப் பாராட்டி இருக்கிறார்!

1963-ஆம் ஆண்டு பசும்பொன் திருமகனார் அவர்கள் நிறைவெய்திய போது, பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்று கழகத்தில் இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். அவர்களும், இந்தப் பசும்பொனுக்கு வந்து அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள்.

### தேவர் நினைவிடத்தை மணிமண்டபமாக உருவாக்கிக் கொடுத்தவர் கலைஞர்!

இன்றைக்கு ஏராளமான அரசியல் தலைவர்களும், பொதுமக்களும் வந்து, பசும்பொன் திருமகனா ரின் நினைவைப் போற்றும் இந்த நினைவிடத்தை, 1969ல் பார்வையிட்டு, 1974ல் மணிமண்டபமாக உருவாக்கிக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

> **“பசும்பொன் திருமகனாரின் புகழைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமையோடு எடுத்துச் சொன்னதை நான் இங்கே நினைவு கூர விரும்புகிறேன். “அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் மாதிரி, கம்பீரமாகக் காட்சி அளித்தார் தேவர் திருமகன்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், பசும்பொன் திருமகனாரை மனதாரப் பாராட்டி இருக்கிறார்!”**

பாம்பன் பாலத்தைக் கட்டிய நீலகண்டன் அவர்கள்தான் இதையும் கட்டியிருக்கிறார்.

### மதுரையில் தேவர் திருவுருவச் சிலை!
#### குடியரசுத் தலைவரைக் கொண்டு திறந்தவர் கலைஞர்!

அதேபோல், பி.கே.மூக்கையாத் தேவர் அவர்களின் முயற்சியால் அமைக்கப்பட்டு, மதுரையில் கம்பீரமாக நிற்கும் தேவர் சிலை திறப்பு விழாவுக்கு அன்றைக்கு குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, அந்த விழாவிற்குத் தலைமை வகித்தவரும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

பசும்பொன் திருமகனாரின் நினைவைப் போற்றக்கூடிய, புகழைச் சொல்லக்கூடிய வகையில், தலைவர் கலைஞர் அவர்கள் செய்த முன்னெடுப்புகளைத் தலைப்புச் செய்திகளாக சிலவற்றை மட்டும் நான் இங்கு பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

- மதுரை ஆண்டாள்புரம் பாலத்திற்கு முத்துராமலிங்கத் தேவர் பாலம் என்று பெயர் சூட்டினார்.
- காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவர் பெயரால் 25 இலட்சம் மதிப்பிலான அறக்கட்டளை உருவாக்கினார்.
- 2007ஆம் ஆண்டு பசும்பொன் திருமகனார் நூற்றாண்டு விழாவை, மாபெரும் அரசு விழாவாகக் கொண்டாடினார்.
- பசும்பொன் திருமகனார் நினைவகத்தில் அணையாவிளக்கு அமைத்தது,
- தேவர் இல்லத்தை 10 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்தது,
- 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் நூற்றாண்டு விழா வளைவு அமைத்தது,
- 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் புகைப்படக் கண்காட்சி,
- 4 இலட்சம் ரூபாய் மதிப்பில் நூலகம்,
- 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடி இறக்கும் இடம்,
- 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் பால்குட மண்டபம்,
- 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் முளைப்பாரி மண்டபம்
- நினைவகத்தைச் சுற்றியிருக்கின்ற சாலையை கல் சாலையாக்கியது தலைவர் கலைஞர் அவர்கள். இப்படி நிறையச் செய்து பெருமைப் படுத்தியிருக்கிறார்.
- அதுமட்டுமல்ல, பசும்பொன் திருமகனாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பசும்பொன் கிராமத்திற்கு மட்டும், மொத்தமாக 2 கோடியே 5 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் பல்வேறு பணிகளைச் செய்து கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## நாடெங்கும் பரவும் திராவிட மாடல்!

# கேரளாவிலும் மகளிர் உரிமைத் தொகை!

## முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு!

**திருவனந்தபுரம், அக்.31-**

**தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் படிப்படியாக நாடெங்கும் பரவி வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக கேரள மாநிலத்திலும் மகளிர் உரிமைத் தொகை திட்டம் விரைவில் அமலுக்கு வரவுள்ளது.**

இதுதொடர்பாக திருவனந்தபுரத்தில் கேரள முதல்வர் பினராயி விஜயன் நிருபர்களிடம் கூறியதாவது:-

கேரளாவில் பெண்கள் பாதுகாப்புத் திட்டத்தைஅமல்படுத்தஅரசுதீர்மானிக்கப் பட்டுள்ளது. இதன்படி சமூக நல ஓய்வூதியம் பெறாத திருநங்கைகள் உள்பட ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பெண்



களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

35 வயது முதல் 60 வயது வரை உள்ள மஞ்சள் மற்றும் பிங்க் நிற ரேஷன் கார்டுகள் வைத்திருக்கும் 31.34 லட்சம் பெண்கள் இந்த திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள். அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு மாதம் ரூ.1000 அதிகரிக்கப்படும். முதியோர் ஓய்வூதியம் ரூ. 1600லிருந்து 2000 ஆக உயர்த்தப்படும். ஆஷா தொழிலாளர்களின் ஊதியமும் ரூ. 1000 அதிகரிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

ஏற்கனவே தமிழ்நாட்டில் மகளிர்க்கு உரிமைத் தொகையாக மாதம் ரூ.1000 வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. தற்போது கேரளாவிலும் இத்திட்டம் அமலுக்கு வருகிறது. படிப்படியாக பல்வேறு மாநிலங்களிலும் பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம் வர இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### தமிழ்நாட்டில் மேலும் 2 சிப்காட் தொழில் பூங்காக்கள்! அனுமதிகோரி விண்ணப்பம்!

*சென்னை, அக்.31-*

*தமிழ்நாட்டில் மேலும் இரண்டு சிப்காட் தொழில் பூங்காக்கள் அமைப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி கோரி சிப்காட் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.*

*சென்னை - பரந்தூருக்கு அருகில் உள்ள மதுரமங்கலத்தில் 422.33 ஏக்கரில் 530 கோடி ரூபாயில் புதிய சிப்காட் அமைய உள்ளது. இதேபோல், மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் 278.26 ஏக்கர் பரப்பளவில் 68 கோடி ரூபாயில் புதிய சிப்காட் தொழில் பூங்கா அமைய உள்ளது. இந்நிலையில், இந்த இரண்டு சிப்காட் தொழில் பூங்காக்கள் அமைப்பதற்கு சுற்றுச் சூழல் அனுமதி கோரி சிப்காட் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.*

## பீகாரில் ரிமோட் கண்ட்ரோல் ஆட்சி!

# மோடியின் நாடகத்தால் மயங்கி விடாதீர்!

## தேர்தல் பிரச்சாரத்தில் ராகுல்காந்தி ஆவேசம்!

**முசாபர்பூர், அக்.31-**

**பீகாரில் ரிமோட் கண்ட்ரோல் மூலம் ஆட்சி நடத்தும் பிரதமர் மோடி, ஓட்டு வாங்க நடனம் கூட ஆடுவார் என்று ராகுல்காந்தி ஆவேசமாக பேசினார். பீகாரில் நவ.6, 11 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக தேர்தல் நடக்கிறது. அங்கு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி முதல்முறையாக பிரச்சாரம் மேற்கொண்டார். முசாபர்பூர், தர்பங்காவில் நடந்த பொதுக்கூட்டத்தில் இந்தியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி யாதவுடன் இணைந்து கலந்து கொண்ட ராகுல்காந்தி பேசியதாவது:-**

சத் பூஜைக்காக மோடி யமுனையில் நீராடப் போகிறார் என்ற நாடகத்தை நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்திருக்க வேண்டும். நதி மிகவும் அழுக்காக இருப்பதால் சுத்தமான, குழாய் நீரில் ஒரு குட்டை உருவாகியுள்ளது என்பது அம்பலப்படுத்தப்பட்டபோது அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மோடி எல்லா வகையான நாடகங்களையும் நடிக்கத் தயாராக இருக்கிறார். ஒரு தேர்தல் பேரணியில் நீங்கள் அவரிடம் நீங்கள் நடனமாடினால் நாங்கள் உங்களுக்கு வாக்களிப்போம் என்றால் அவர் உடனடியாக பரத நாட்டியம் ஆடுவார்.

பீகாரில் அவர்கள் ரிமோட் கண்ட்ரோல் மூலம் ஆட்சி நடத்துகிறார்கள். இனி அது நடக்காது. தேஜஸ்வி யாதவ் தலைமையில் பீகாரில் ஒரு புதிய அரசாங்கம் அமைக்கப்படும். சாதி மற்றும் மத வேறுபாடுகளைக் கடந்து சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளின் நலன்களும் கவனிக்கப்படுவதை அவரது ஆட்சி உறுதி செய்யும். தற்போதைய முதல்வர் நிதிஷ் குமார் அரசாங்கத்தை நடத்துகிறார் என்ற மாயையை கைவிடுமாறு பீகார் மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.



இது பீகாரை பொருட்படுத்தாத பா.ஜ.க.வின் ரிமோட் கண்ட்ரோல் மூலம் நடத்தப்படும் அரசு. நீங்கள் அணியும் ஆடைகள் பெரும்பாலும் சீனாவில் தயாரிக்கப்பட்ட முத்திரையைக் கொண்டுள்ளன. இவை பீகாரில் தயாரிக்கப்பட்ட ஆடைகளால் மாற்றப்படும் நாளை நான் காண விரும்புகிறேன். ஆனால் பெரிய வணிக நிறுவனங்களுக்கு வேலை செய்யும் ஒரு அரசாங்கத்தின் கீழ் இது நடக்காது. பணமதிப்பிழப்பு, குறைபாடுள்ள ஜிஎஸ்டி போன்ற நடவடிக்கைகளால் பாஜ அழித்த சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஊக்கம் தேவை. காங்கிரஸ் வற்புறுத்தலின் பேரிலேயே மோடி அரசு சாதி வாரி கணக்கெடுப்புக்கு ஒப்புக் கொண்டது. தற்போது இரண்டு இந்தியாக்கள் உரு வாகி வருகின்றன. ஒன்று சாதாரண மக்களுக்கு சொந்தமானது, மற்றொன்று ஐந்து அல்லது 10 பில்லியனர்களுக்கு சொந்தமானது. பீகார் போன்ற இடங்கள் வறுமையில் வாடுவதற்கு இதுவே காரணம், அதன் பரந்த ஆற்றல் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

மலிவான இண்டர்நெட் சேவை ஏழைகளுக்கும் சமூக ஊடகங்களை அணுகக்கூடியதாக மாற்றியுள்ளது என்று மோடி கூறுகிறார். தொலைத் தொடர்புத் துறையில் ஒரு வணிக நிறுவனத்தின் ஏகபோகத்தை மோடி ஏன் வெளிப்படுத்தவில்லை. மேலும், மக்களுக்கு வேலை கொடுக்க முடியாததால், மக்கள் ரீல்கள் மற்றும் இன்ஸ்டாகிராமிற்கு அடிமையாக வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர்கள் மகாராஷ்டிரா மற்றும் அரியானாவில் வாக்குகளைத் திருடிவிட்டனர்.

பீகாரிலும் அதையே செய்ய முயற்சிப்பார்கள். வாக்குகளைத் திருடுவது பாபாசாகேப் அம்பேத்கரின் அரசியலமைப்பின் மீதான தாக்குதல். அரசியலமைப்பைப் பாதுகாக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். அரசியல் சிக்கல்களை உங்களால் சில நொடிகளில் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே மோடியின் நாடகத்தால் நீங்கள் மயங்கிவிட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ராகுல்காந்தி பேசினார்.

### அமெரிக்காவின் நிர்பந்தத்திற்கு அடிபணிந்தது மோடி அரசு!

*புதுடெல்லி, அக்.31-*

*உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், அந்நாட்டைச் சேர்ந்த 2 எண்ணெய் நிறுவனங்கள் மீது அமெரிக்கா சமீபத்தில் பொருளாதார தடை விதித்தது. ரஷ்யாவிலிருந்து சராசரியாக ஒருநாளுக்கு 17 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் இந்தியாவுக்கு அனுப்பப்படும் நிலை யில், அதில் 12 லட்சம் பீப்பாய் வழங்குவது, தடை செய்யப்பட்ட இந்த 2 நிறுவனங்களாகும். இந்நிலையில், அமெரிக்காவின் நிர்பந்தத்திற்கு அடிபணிந்து ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதை மோடி அரசு நிறுத்தியுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.*